1. அறங்காவலர்களையும், தக்கார்களையும் அமர்த்துவதற்கு யாருக்கு அதிகாரம் உள்ளது?

(A) தலைவர்
(B) கிராம அதிகாரி
(C) உதவி ஆணையர்
(D) வரி வசூலிப்பவர்
(E) விடை தெரியவில்லை

2. அறங்காவலர், பசலி ஆண்டு முடிந்து, எத்தனை மாதங்களுக்குள் வரவு-செலவு அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும்.

(A) 6 மாதங்கள்
(B) 4 மாதங்கள்
(C) 2 மாதங்கள்
(D) 1 மாதம்
(E) விடை தெரியவில்லை

3. சௌரம் சமயத்தின் முழு முதல் கடவுள் யார்?

(A) சிவன்
(B) விஷ்ணு
(C) முருகன்
(D) சூரியன்
(E) விடை தெரியவில்லை

4. கோயிலின் எண்பட்டைச் சதுர சிகரம் எந்த வகை கட்டிடக்கலையை சார்ந்தது?

(A) நாகரா கட்டிடக்கலை
(B) வேசரா கட்டிடக்கலை
(C) கோதிக் கட்டிடக்கலை
(D) திராவிட கட்டிடக்கலை
(E) விடை தெரியவில்லை

5. இந்து அறநிலையத்துறை நிதியை எப்படி பெறுகிறது?

(A) அரசிடம் இருந்து மட்டுமே
(B) பக்தர்களிடம் இருந்து மட்டுமே
(C) அரசு மற்றும் தானதாரர்களிடமிருந்து
(D) தனியார் வங்கி கடன் மூலம்
(E) விடை தெரியவில்லை

6. இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம் எந்த ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது?

(A) 1959
(B) 1958
(C) 1970
(D) 1945
(E) விடை தெரியவில்லை

7. "கோயில் நிர்வாகத்தில் தொல்லியல் பாதுகாப்பு" என்பது எதனை குறிக்கிறது?

(A) பழமையான கட்டிடங்களை அகற்றுதல்
(B) பழமையான கலை மற்றும் கட்டிடங்களை பாதுகாத்தல்
(C) சுவர் ஓவியங்களை அழித்தல்
(D) புதுமையான அமைப்புகளை நிறுவுதல்
(E) விடை தெரியவில்லை

8. இந்து அறநிலையத்துறை கீழ் எந்த வகையான தொல்லியல் பணிகள் செய்யப்படுகின்றன?

(A) தொல்லியல் அகழ்வுகள்
(B) புதிய கட்டிடங்கள்
(C) சிற்பங்கள் மற்றும் கல்வெட்டுகள் பாதுகாப்பு
(D) அணைகள் கட்டுதல்
(E) விடை தெரியவில்லை

9. தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறக்கட்டளைகள் சட்டம் – 1959-ன் பிரிவு-8-ன் படி, பின்வரும் வகையைச் சார்ந்த அதிகாரிகள் இருப்பர்.

(i) ஆணையர், இணை ஆணையர், கூடுதல் ஆணையர்

(ii) ஆணையர், இணை ஆணையர், உதவி ஆணையர்கள்

(iii) ஆணையர், கூடுதல் ஆணையர், இணை ஆணையர்

(iv) ஆணையர், கூடுதல் ஆணையர், உதவி ஆணையர்கள்

(A) (i) மட்டும் (B) (ii) மட்டும்

(C) (iii) மட்டும் (D) (iv) மட்டும்

(E) விடை தெரியவில்லை

10. ஆதினம் என்ற வார்த்தை மடம் என்ற வார்த்தையில் அடங்கியதாகும் என்று கூறிய வழக்கு/வழக்குகள்.

(i) திருவம்பல தேசிகர் எதிர் சின்ன பண்டாரம்

(ii) அஜபா நடேஸ்வரன் எதிர் ஸ்ரீ வைத்தியலிங்க பண்டார சன்னதி

(iii) கைலாலம் பிள்ளை எதிர் நடராச தம்பிரான்

(A) (iii) மட்டும் (B) (ii) மட்டும்

(C) (i) மற்றும் (iii) மட்டும் (D) (i), (ii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

11. சிதம்பரம் அருள்மிகு நடராசர் திருக்கோயில் பொதுக்கோயில் என்று தீர்ப்பளித்த நீதியரசர்கள்

(i) J. முத்துச்சாமி ஐயர், ஷெப்பேர்ட் JJ. 17$^{வது}$, செப்டம்பர், 1891

(ii) J. முத்துச்சாமி ஐயர், ஷெப்பேர்ட் JJ. 17$^{வது}$, ஜூலை, 1890

(iii) J. முத்துச்சாமி ஐயர், ஷெப்பேர்ட் JJ. 17$^{வது}$, மார்ச் 1890

(A) (i) மட்டும் (B) (ii), (iii) மட்டும்

(C) (iii) மட்டும் (D) (i) (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

12. தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கட்டளைகள் சட்டம், 1959, பிரிவு 34-A, உட்பிரிவு 4-ன் படி ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினால் பாதிக்கப்பட்ட நபர், எந்த நீதிமன்றத்தில், எத்தனை நாட்களுக்குள் சீராய்வு மறுதாக்கல் செய்யலாம்?

(A) உச்சநீதிமன்றம், 60 நாட்களுக்குள்

(B) உயர்நீதிமன்றம், 90 நாட்களுக்குள்

(C) மாவட்ட நீதிமன்றம் 90 நாட்களுக்குள்

(D) உயர்நீதிமன்றம், 60 நாட்களுக்குள்

(E) விடை தெரியவில்லை

13. த.நா. இந்து சமய மற்றும் அறநிலை கட்டளைகள் சட்டம் – 1959. பிரிவு – 6(15) –ன் உரித்தமுடையவர், என்பதில் புதிதாக சேர்க்கப்பட்ட உட்பிரிவை கண்டறிக. (சட்டத்திருத்தம் சட்ட எண் 26 (2012)

(i) 6(15) (c) – குறித்தவகை நிலைக்கொடை

(ii) 6(15) (d) – சமாதி, பிருந்தாவனம்

(iii) 6(15) (e) – கோயில்

(A) (i), (ii) மட்டும்

(B) (ii) மட்டும்

(C) (ii), (iii) மட்டும்

(D) (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

14. த.நா. இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் – 1959, சட்ட திருத்தம் 26/2013-ன் படி, கீழ்கண்ட எந்த பிரிவின் கீழ் அறங்காவலர்களின் தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன?

(A) பிரிவு 24 A

(B) பிரிவு 25 A

(C) பிரிவு 26 A

(D) பிரிவு 27 A

(E) விடை தெரியவில்லை

15. அறங்காவலர் குழுவின் குறைந்தபட்ச நபர்களின் எண்ணிக்கை

(A) 2

(B) 3

(C) 4

(D) 5

(E) விடை தெரியவில்லை

16. கோயில் கட்டிடம் சரிபார்ப்பு எனும் பெயரில், பழமையான சிற்ப, ஓவிய (அ) புராதன சின்னங்கள் பாதிக்கப்படவோ, அகற்றப்படவோ நேருமெனில் அதற்கு ஒப்புதல் அளிக்கும் உரிமை யாருக்கு உள்ளது?

(A) அறங்காவலர் (அ) அறங்காவலர் குழு

(B) ஆணையர்

(C) பஞ்சாயத்து குழு

(D) கோயில் நிர்வாக குழு

(E) விடை தெரியவில்லை

17. "மடம்" என்பதன் சரியான வரையறை என்ன?

(A) மதசேவைகளை ஆற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்டவை

(B) மதக்கோட்பாடுகளை விளக்கி மதத்தை பரப்பும் சமய ஆசிரியர்களை உள்ளடக்கியது

(C) ஆன்மீக பாடல்களை இயற்றுவோரைக் கொண்டவை

(D) சமய சீர்த்திருத்தங்களை முன்னெடுப்பவை

(E) விடை தெரியவில்லை

18. வெளிநாடு சென்று வந்த அர்ச்சகர் ஒருவரை, ஆகம விதிகளின்படி மீண்டும் அத்திருக்கோயிலில் பணி புரிய அனுமதிக்க இயலுமா என்பது குறித்து பிரிவு 63(e) ன் கீழ் _________ மட்டுமே விசாரணை செய்து உத்தரவிட இயலும்.

(A) ஆணையர்

(B) துணை ஆணையர்

(C) இணை ஆணையர்

(D) கூடுதல் ஆணையர்

(E) விடை தெரியவில்லை

19. 1926–ஆம் ஆண்டின் சென்னை இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் பிரிவு 10–ல் உருவாக்கப்பட்டது _________ என்று பொருள்படும்.

(A) ஆலோசனைக் குழு
(B) உதவி ஆணையர்
(C) ஆணையர்
(D) வாரியம்
(E) விடை தெரியவில்லை

20. 1959–ன் தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறக்கட்டளைகள் சட்டத்தின் படி ஆலோசனை குழு என்பது _________ –ன் கீழ் அரசால் அமைக்கப்பட்ட குழு என்று பொருள்படும்.

(A) பிரிவு 7
(B) பிரிவு 7(1)
(C) பிரிவு 8
(D) பிரிவு 9
(E) விடை தெரியவில்லை

21. சரியாக பொருத்துக.

(M) நயம் மெழுகு — (I) களிமண் ஒரு பாகம், மணல் இரண்டு பாகம்
(N) வெட்டைமெழுகு — (II) குங்கிலியம் ஒரு பாகம், தேன்மெழுகு 1½ பாகம்
(O) முதல் பூச்சு — (III) தேன்மெழுகு, குங்கிலியம் சமபாகம்
(P) படிமண் — (IV) வண்டல் மண், பசும் சாணம்

| | (M) | (N) | (P) | (O) |
|---|---|---|---|---|
| (A) | (II) | (III) | (IV) | (I) |
| (B) | (I) | (II) | (III) | (IV) |
| (C) | (II) | (IV) | (III) | (I) |
| (D) | (IV) | (I) | (II) | (III) |

(E) விடை தெரியவில்லை

22. கழறிற்றறிவார், கூற்றுவ நாயனார், புகழ்ச்சோழர் நரசிங்க முனையரையர் இவர்கள் நால்வருக்கும் பொருந்தும் ஒன்று

(A) திருமுடி

(B) புத்தகம்

(C) கத்தி

(D) கமண்டலம்

(E) விடை தெரியவில்லை

23. சைவக் கோயில்களில் அட்ட பரிவாரங்களுள் ஒருவராக கருதப்படுபவர் __________ ஆவார்.

(A) தட்சணா மூர்த்தி

(B) லிங்கோத்பவர்

(C) சண்டேசர்

(D) நந்திகேஷ்வரர்

(E) விடை தெரியவில்லை

24. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (M) | இந்திராணி | (I) | சங்கு, சக்கரம், கொடி, சங்குலி |
| (N) | பிராமி | (II) | சூலம், மண்டை ஓடு, உடுக்கை, கயிறு |
| (O) | சாமுண்டி | (III) | அங்குசம், கமண்டலம், அட்சமாலை, தடி |
| (P) | வைஷ்ணவி | (IV) | அங்குசம், சக்கரம் வஜ்ரம், ஈட்டி |

| | (M) | (N) | (O) | (P) |
|---|---|---|---|---|
| (A) | (I) | (II) | (III) | (IV) |
| (B) | (IV) | (III) | (II) | (I) |
| (C) | (IV) | (II) | (III) | (I) |
| (D) | (I) | (III) | (II) | (IV) |

(E) விடை தெரியவில்லை

25. கங்காளர் மூர்த்தத்தில் தன்கரங்களில் வைத்திருக்கும் ஆயுதம் ஆராய்க

(A) உடுக்கை – வாசிப்பு

(B) மான் – புல்

(C) கங்காளம் – மான்

(D) மான் – உடுக்கை

(E) விடை தெரியவில்லை

26. மாமல்லபுரம் குடைவரை மண்டபத்திலும், திருப்பரங்குன்றம் குடைவரையிலும், ஸ்ரீ முஷ்ணத்திலும் காணப்படும் அவதார சிற்பம் எதுவென காண்க

(A) கூர்ம அவதாரம்

(B) பலராம அவதாரம்

(C) வராக அவதாரம்

(D) பரசுராம அவதாரம்

(E) விடை தெரியவில்லை

27. திரிவிக்ரமர் எத்தனை கைகள் உடையவர்

(A) 12 கைகள்

(B) 8 கைகள்

(C) 16 கைகள்

(D) 4 கைகள்

(E) விடை தெரியவில்லை

28. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (M) | ஸ்தானகம் | (I) | அரைக்கிடக்கை |
| (N) | அர்த்தர்தாசயனம் | (II) | நின்ற |
| (O) | சம சயனம் | (III) | குறைகிடக்கை |
| (P) | அர்த்த சயனம் | (IV) | சமக்கிடக்கை |

| | (M) | (N) | (O) | (P) |
|---|---|---|---|---|
| (A) | (I) | (IV) | (II) | (III) |
| (B) | (II) | (I) | (IV) | (III) |
| (C) | (II) | (III) | (IV) | (I) |
| (D) | (II) | (I) | (III) | (IV) |

(E) விடை தெரியவில்லை

29. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (M) | காஞ்சிபுரம் | (I) | இராஜ கோபால சுவாமி |
| (N) | உத்திரமேரூர் | (II) | சௌமிய நாராயணப் பெருமாள் |
| (O) | திருக்கோட்டியூர் | (III) | வைகுந்தப் பெருமாள் |
| (P) | மன்னார்கோயில் | (IV) | சுந்தரவரதர் |

| | (M) | (N) | (O) | (P) |
|---|---|---|---|---|
| (A) | (III) | (II) | (I) | (IV) |
| (B) | (I) | (II) | (IV) | (III) |
| (C) | (III) | (IV) | (II) | (I) |
| (D) | (IV) | (III) | (I) | (II) |

(E) விடை தெரியவில்லை

30. கீழ்வரும் கணபதிகளில், யாருடைய இடது தன்கரத்தில் பூங்கொத்து, மேற்கரத்தில் கரும்பு பிடித்திருப்பார். அவர் நடுவரின் பெயரை தேர்ந்தெடுக்கவும்

(A) விஜய கணபதி
(B) பிங்கள கணபதி
(C) ஏகாட்சர கணபதி
(D) ஹரித்ரா கணபதி
(E) விடை தெரியவில்லை

31. சரியாக பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (M) | சங்கடஹர கணபதி | (I) | 6 கைகள் |
| (N) | வல்லபை கணபதி | (II) | 4 கைகள் |
| (O) | ஊர்த்துவ கணபதி | (III) | 10 கைகள் |
| (P) | உச்சிஷ்ட கணபதி | (IV) | 8 கைகள் |

| | (M) | (N) | (O) | (P) |
|---|---|---|---|---|
| (A) | (I) | (III) | (II) | (IV) |
| (B) | (II) | (III) | (IV) | (I) |
| (C) | (IV) | (III) | (I) | (II) |
| (D) | (III) | (I) | (IV) | (II) |

(E) விடை தெரியவில்லை

32. ஐந்து விரல்களும் ஐந்து தத்துவப் பொருள்களைக் குறிக்கும் இதன்படி "நடுவிரல்" உணர்த்தும் பொருள் கீழ்வருவனவற்றுள் ஒன்று

(A) 'பதியாகிய பரமான்மாவையும்'

(B) 'கன்ம மலத்தையும்'

(C) 'மாயா மலத்தையும்'

(D) 'ஆணவ மலத்தையும்'

(E) விடை தெரியவில்லை

33. விநாயகரின் அமர்ந்த கோலத்தில் காணப்படும் ஆசனம் கீழ்வருவனவற்றில் ஒன்று

(A) கருடாசனம்

(B) யோகாசனம்

(C) லலிதாசனம்

(D) அர்த்த பத்மாசனம்

(E) விடை தெரியவில்லை

34. கீழ்வருவனவற்றில் பொருந்தாத ஒன்று ____________ ஆகும்.

(A) பஞ்சாடை
(B) பட்டாடை
(C) தோலாடை
(D) திரலாடை
(E) விடை தெரியவில்லை

35. கீழ்வரும் அங்குலங்களில் ஒன்று பொருந்தாது ____________.

(A) மானாங்குலம்
(B) மாத்ராங்குலம்
(C) தேகாங்குலம்
(D) சித்ராங்குலம்
(E) விடை தெரியவில்லை

36. சர்ப்ப மௌலி - தலைக்கோலம் - கீழ்வரும் மூர்த்தங்களில் ஒருவருக்கு சிறப்பான தலைகோலம் ஆகும்.

(A) நடராஜர்-மூர்த்தம்
(B) சுகாசன மூர்த்தி
(C) சோமாஸ்கந்த மூர்த்தி
(D) ரிஷபாந்திக மூர்த்தி
(E) விடை தெரியவில்லை

37. பஞ்ச பூதங்களைத் தன் மேனியில் மணியாரமாகக் கொண்டு ____________ விளங்குகிறார்.

(A) சிவன்
(B) விஷ்ணு
(C) முருகன்
(D) நான்முகன்
(E) விடை தெரியவில்லை

38. மண்டபத்திற்கு மேலே மற்றொரு 1 தலமிருந்தால் (மேல்தலம்) அதற்கு __________ என்று பெயர்.

(A) நிருத்த மண்டபம்
(B) முக மண்டபம்
(C) மாலிகா மண்டபம்
(D) வாகன மண்டபம்
(E) விடை தெரியவில்லை

39. உத்திர வகை ———— வகையாக மரபு கட்டடக் கலை நூலில் கூறப்பட்டுள்ளது.

(A) ஐந்து
(B) எட்டு
(C) மூன்று
(D) இரண்டு
(E) விடை தெரியவில்லை

40. ஆலயத்தை எத்தனை விதமான அமைப்பை உயர வசத்தால் நூல் கூறுகிறது.

(A) 8 விதமாக
(B) 4 விதமாக
(C) 3 விதமாக
(D) 5 விதமாக
(E) விடை தெரியவில்லை

41. மானசாரத்தின்படி சிவபரிவார ஆலயத்தில் இரண்டாம் பிரகாரத்தில் எத்தனை பரிவார அமைத்தல் வேண்டும்.

(A) 10
(B) 16
(C) 32
(D) 08
(E) விடை தெரியவில்லை

42. அம்போஜகேசரம் எந்த வகை அதிஷ்டானத்தை சேர்ந்தது

(A) பாத பெந்தம்

(B) பிரதி பெந்தம்

(C) பிஸ்தா

(D) மஸ்தகா

(E) விடை தெரியவில்லை

43. ஐந்து பட்டமாக அமைக்கும் ஸ்தம்பத்திற்கு __________ என்று கூறப்படுகின்றது.

(A) ஸ்கந்த காந்தம்

(B) ருத்ர காந்தம்

(C) இந்திர காந்தம்

(D) சிவ காந்தம்

(E) விடை தெரியவில்லை

44. உபபீடம் __________ விதமாக சொல்லப்பட்டுள்ளது.

(A) 10

(B) 12

(C) 07

(D) 08

(E) விடை தெரியவில்லை

45. 26 மானங்குளம் __________ ஐ குறிக்கும்.

(A) 1 கிஷ்கு முழம்

(B) 1 பிராஜாபத்யம்

(C) 1 தனுர் முஷ்டி

(D) 1 பிராச்சியம்

(E) விடை தெரியவில்லை

46. ஆலயத்தில் ஜாலகத்தை எந்த மட்டத்தில் அமைக்கலாம்.

(A) உபபீட மட்டம்

(B) அதிஷ்டான மட்டம்

(C) வேதிகையின் மேல் மட்டம்

(D) உத்தர மேல் மட்டம்

(E) விடை தெரியவில்லை

47. சதுரமாகவும் முள்ளினாலே துளைத்ததைப் போன்ற துவாரமுடையதுமான ஜாலகத்திற்கு __________ என்று பெயர்.

(A) ஹஸ்திநேத்திரம்
(B) கோநேத்திரம்
(C) புஷ்பகர்ணம்
(D) ருஜுக்கிரியம்
(E) விடை தெரியவில்லை

48. சிகரத்தில் __________ நாஸியானது சிகரத்தின் விஸ்த்தாரத்திற்கு ஏற்றதாக இருப்பது பிரஸித்தி பெற்றதாகும்.

(A) மஹா நாசி
(B) அல்ப நாசி
(C) லலாட நாசி
(D) கூர்ம கூடு
(E) விடை தெரியவில்லை

49. காலம், அனலம், ருத்ராக்ஷம் (சிவன்), சூலம், ஆலோகனம், குணம், இவைகள் ————— அங்குலங்களைக் கூறும் சொற்களாம்.

(A) ஐந்து அங்குலம்
(B) மூன்று அங்குலம்
(C) எட்டு அங்குலம்
(D) ஆறு அங்குலம்
(E) விடை தெரியவில்லை

50. நாற்பத்தெட்டு (48) தூண்கள், இருபத்துநான்கு (24) அல்ப நாசி, எட்டு தோரணங்களுடன் கூடியதாக இருக்கக் கூடியது ————— மண்டபமாகும்.

(A) முகமண்டபம்
(B) பிரதிமா மண்டபம்
(C) ஸ்நபநார்த்த மண்டபம் (அபிஷேகம்)
(D) நிருத்த மண்டபம்
(E) விடை தெரியவில்லை

51. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (a) | சிதம்பரம் | 1. | வெற்றிசபை |
| (b) | திருநெல்வேலி | 2. | சித்திரசபை |
| (c) | குற்றாலம் | 3. | தாமிரசபை |
| (d) | மதுரை | 4. | கனகசபை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

52. பொருத்துக - மதுரை மீனாட்சி அம்மன் கோயில்

| | | | |
|---|---|---|---|
| (a) | கிழக்கு கோபுரம் | 1. | நாட்டுக்கோட்டை நகரத்தாரால் கட்டப்பட்டது |
| (b) | மேற்கு கோபுரம் | 2. | பாண்டிய மன்னன் ஜடாவர்மன், சுந்தர பாண்டியனால் கட்டப்பட்டது |
| (c) | தெற்கு கோபுரம் | 3. | பராக்கிரம பாண்டியனால் கட்டப்பட்டது |
| (d) | வடக்கு கோபுரம் | 4. | நாயக்கர்களால் கட்டப்பட்டது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

53. 1509 முதல் 1530 இவருடைய ஆட்சி காலம் ஆகும்

(A) ஹரிஹர புக்கர்

(B) கிருஷ்ண தேவராயர்

(C) திருமால் நாயக்கர்

(D) அம்பைய தீட்சிதர்

(E) விடை தெரியவில்லை

54. சாளுவன் குப்பம்

சிங்கப்பெருமாற் கோயில்

சிங்கவரம்

பல்லாவரம் - ஆகிய குடைவரை உள்ள இடங்களில் ———————— மன்னர்களின் குடைவரை உள்ள ஊர்கள்.

(A) சோழ மன்னர்

(B) பாண்டிய மன்னர்

(C) நாயக்க மன்னர்

(D) பல்லவ மன்னர்

(E) விடை தெரியவில்லை

55. யாருடைய குடைவரைக் கோயில்கள்

கங்கை கொண்டான் (சீவலப்பேரி)

செவல்பட்டி (சிவகாசி திருவேங்கடம்)

திருச்சிராப்பள்ளி - (மலைக்கோட்டை)

மாங்குளம் (மதுரை-மேலூர்)

(A) பல்லவர் கலைபாணி

(B) பாண்டியர் கலைபாணி

(C) சோழர்கள் கலைபாணி

(D) சேரர்கள் கலைபாணி

(E) விடை தெரியவில்லை

56. அதியர் குடைவரைகள் (நாமக்கல்) உருவாக்கியவர் இவர் ஆவார்.

(A) இராஜசிம்மன்

(B) மாமல்லன்

(C) அதியமான் சோமன்

(D) களங்குடி வைத்யன்

(E) விடை தெரியவில்லை

57. கல்வெட்டில் 'எக்காட்டூர் கோன் பெருந்தச்சன்' என்ற பெயர் பொறிக்கப்பட்ட குடைவரை இது ஆகும்.

(A) கோவர்த்தகிரி குடைவரை
(B) மாமல்லபுரம் குடைவரை
(C) பிள்ளையார்பட்டி குடைவரை
(D) திருமலாபுரம் குடைவரை
(E) விடை தெரியவில்லை

58. சிதம்பரம் நடராஜர் கோயில் கருவறை விமானத்திற்குப் 'பொன் கூரை' வேயப்பட்டது. இவர் காலத்தில் ஆகும்.

(A) சோழர்களின் காலத்தில்
(B) விஜயநகரர்களின் காலத்தில்
(C) பாண்டியர்களின் காலத்தில்
(D) மதுரை நாயக்கர்களின் காலத்தில்
(E) விடை தெரியவில்லை

59. கொடும்பாளூர் (திருச்சி) மூவர்கோயில், இம்மூன்று சிவன் கோயில்களும் ———— திசை நோக்கி அமைக்கப்பட்டுள்ளது.

(A) மேற்கு
(B) தெற்கு
(C) வடக்கு
(D) கிழக்கு
(E) விடை தெரியவில்லை

60. தஞ்சை பெரிய கோயிலின் கருவறை விமானம் ———— தளங்களை கொண்டதாகும்.

(A) 11 தளங்கள்
(B) 13 தளங்கள்
(C) 15 தளங்கள்
(D) 9 தளங்கள்
(E) விடை தெரியவில்லை

61. இடது முழங்கால் மடக்கி, வலது முழங்கால் பூமியில் படும்படி வைத்தும், இருபுறமும் மனைவியர் இருவரும் அமர்ந்த நிலையில் வலதுகையில் கத்தி இடது கையில் கேடயம் தரித்தவர் ———— ஆவார்.

(A) வாலி முனீசுரன்
(B) காத்தவராயன்
(C) கருப்பன்
(D) வீரன்
(E) விடை தெரியவில்லை

62. ஒரு முகமும், 10 கைகளும், சடைமுடியில் பிறை நிலவை உடையவளும், தங்க மேனியுடன் பட்டாடை அணிந்து தாமரை, மணி, சூலம், கோடரி, கத்தியும், இடது புறம் வரதம், சங்கு, அம்பு, வில், கேடயம் கொண்டவள் - ஆவாள்.

(A) பேச்சியம்மாள்
(B) காத்தாயி அம்மாள்
(C) காட்டேரி அம்மன்
(D) பிடாரி அம்மன்
(E) விடை தெரியவில்லை

63. ‘அதிரனச்சந்த மண்டபம்’ இவ்விடத்தில் உள்ளது.

(A) வல்லம்
(B) சாளுவன்குப்பம்
(C) மண்டகப்பட்டு
(D) மாமண்டூர்
(E) விடை தெரியவில்லை

64. “மழை நீங்கிய மாவிசும்பின் மதிசேர்ந்த மகவெண்மீன் உருகெழுதிறல் உயர்கோட்டம்”என குறிப்பிடும் நூல் எதுவென கீழ்வருனவற்றில் காண்க.

(A) மணிமேகலை
(B) அகநானூறு
(C) புறநானூறு
(D) பட்டினப்பாலை
(E) விடை தெரியவில்லை

65. மாமல்லபுரத்தில் உள்ள ஒற்றைக்கல் – கணேச ரதத்தின் உச்சியில் ———————— கலசங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

(A) ஐந்து

(B) ஏழு

(C) மூன்று

(D) ஒன்பது

(E) விடை தெரியவில்லை

66. "சுதை செய் மாடத்துப் பனிக்கயத் தன்ன நீணகர்" என வரும் அடிகள் இடம்பெறும் நூல்

(A) அகநானூறு

(B) புறநானூறு

(C) பரிப்பாடல்

(D) இலக்கிய நூல்

(E) விடை தெரியவில்லை

67. தர்மராஜரதம் - விமானத்தின் பொருத்துக

(a) கிழக்கு சுவரில் — 1. கங்காள மூர்த்தி

(b) வடக்கு சுவரில் — 2. காளிய நர்த்தன கிருஷ்ணன்

(c) தெற்கு சுவரில் — 3. கங்காதரர், கருடவாகன விஷ்ணு

(d) மேற்கு சுவரில் — 4. நாட்டிய பூதகணங்கள்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

68. வெற்றிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பூதச்சதுக்கம் பாவை மன்றம் என்று ஐவகை மன்றங்களும் புகாரில் இருந்தன என கூறும் நூல் எழுதுக.

(A) பூம்புகார்

(B) மணிமேகலை

(C) சிலப்பதிகாரம்

(D) பட்டினப்பாலை

(E) விடை தெரியவில்லை

69. பஞ்ச பாண்டவர் ரதங்களில் சிறியது ———————— இரதம் தான்.

(A) திரௌபதி ரதம்

(B) அர்ச்சுன ரதம்

(C) பீமரதம்

(D) தர்மராஜா ரதம்

(E) விடை தெரியவில்லை

70. 'கலாசமுத்திரம்' என்ற அடைமொழியுடன் அழைக்கப்பட்ட பல்லவ மன்னர் இவர் ஆவார்.

(A) இரண்டாம் நரசிம்மன் என்ற ராஜசிம்மன்

(B) மகேந்திர வர்மன்

(C) நந்திவர்மன்

(D) நரசிம்ம வர்மன்

(E) விடை தெரியவில்லை

71. M20 கான்கிரீட்டிற்கான சமதளப் பட்டைகளுக்கான வடிவமைப்பு பிணைப்பு அழுத்தம் ———————— ஆகும்

(A) 1.4 நியூட்டன்/மிமீ$^2$

(B) 1.0 நியூட்டன்/மிமீ$^2$

(C) 1.2 நியூட்டன்/மிமீ$^2$

(D) 1.5 நியூட்டன்/மிமீ$^2$

(E) விடை தெரியவில்லை

72. ஒரு வழி சதுரணியின் எளிமையான தாங்கி, பொதுவான சுமைகள் உள்ள குடியிருப்பு, குறைந்த வர்த்தக கட்டிடங்களில் நிலைக்குழப்ப விகிதம் ———— ஆகும்

(A) 7 (B) 20

(C) 30 (D) 26

(E) விடை தெரியவில்லை

73. பின் இழுத்தல் முறையில் (Post tensioning) ஸ்டீல் எப்போது இழுக்கப்படுகிறது.

(A) கான்கிரீட் ஊற்றுவதற்கு முன்

(B) கான்கிரீட் கலக்கும் நேரத்தில்

(C) கான்கிரீட் வலுவடைந்த பிறகு

(D) ஸ்டீல் ஒருபோதும் இழுக்கபடாது

(E) விடை தெரியவில்லை

74. SP17-1984 கைப்புத்தகத்தின் முக்கியமான நோக்கம் எது?

(a) உயரமான கட்டிடங்களின் கட்டுமான நுட்பங்கள்

(b) அணைகள் மற்றும் குளங்கள் உருவாக்குவதற்கான வடிவமைப்பு

(c) வசிப்பகுதி மற்றும் பொது கட்டிடங்களுக்கான செயல்திறன் தேவைகள்

(d) தொழிற்துறை கட்டிடங்களின் பாதுகாப்பிற்கான வழிகாட்டுதல்கள்

(A) (a) மட்டும் (B) (b) மட்டும்

(C) (c) மட்டும் (D) (d) மட்டும்

(E) விடை தெரியவில்லை

75. நேரடி அழுத்தம், வளைத்தல் அழுத்தத்தை விட அதிகமாக இருக்கும் போது, அச்சின் முழுவதும் —————— அழுத்தம் ஏற்படும்

(A) விரிவாக்க அழுத்தம்

(B) சுருக்க அழுத்தம்

(C) விரிவாக்க அல்லது சுருக்க அழுத்தம்

(D) விரிவாக்க மற்றும் சுருக்க அழுத்தம்

(E) விடை தெரியவில்லை

76. ஒரு கம்பி அதன் சுய எடையின் காரணமாக கீழே தொங்கும் போது அதன் நீட்டிப்பு சூத்திரம் —————— ஆகும்

(W) = ஒரு மீட்டருக்கு கம்பியின் எடை

(L) = கம்பியின் முழு நீளம்

(E) = பொருளின் ஈள்நிலை மாடுலஸ் (Modulus of Elasticity)

(A) $\Delta \mathrm{L} = \mathrm{WL}^2 / 2E$

(B) $\Delta \mathrm{L} = WL / 2E$

(C) $\Delta \mathrm{L} = WL^3 / 2E$

(D) $\Delta \mathrm{L} = 2WL^2E$

(E) விடை தெரியவில்லை

77. IS 456-2000 இன்படி, M25 என்பது —————— ஆகும்

(A) நிலையான கான்கிரீட்

(B) சாதாரண கான்கிரீட்

(C) உயர்தர கான்கிரீட்

(D) குறைந்த வலிமை கான்கிரீட்

(E) விடை தெரியவில்லை

78. இழுவை நீக்கம் (Tensile strain) என்பது

(A) நீண்டதலின் மாற்றம்/மூல நீளம்

(B) நீளத்தின் குறைவு/மூல நீளம்

(C) பக்கவாட்டு நகர்வு/உயரம்

(D) அளவின் மாற்றம்/மூல அளவு

(E) விடை தெரியவில்லை

79. வளைந்த சுற்றளவுள்ள திரும்பிய கோளக்கம்பியின் நீட்டிப்பு:

$P =$ பிரயோகப்படுத்தபடும் விசை

$L =$ கம்பியின் நீளம்

$E =$ யங்கின் நிலைத்தன்மை மாறி

$d_1, d_2 =$ பெரிய மற்றும் சிறிய பரிமாண விட்டங்கள்

(A) $\Delta L = \frac{PL}{\pi E d_1 d_2}$

(B) $\Delta L = \frac{4P}{\pi E d_1 d_2}$

(C) $\Delta L = P / \pi E d_1 d_2$

(D) $\Delta L = 4PL / \pi E d_1 d_2$

(E) விடை தெரியவில்லை

80. IS கோடு 269-1967 படி, சிமெண்டின் குறைந்தபட்ச ஆரம்ப அனுமதிக்கும் நேரம் (Initial setting time) என்பது ———————— ஆகும்.

(A) 10 நிமிடங்கள்

(B) 30 நிமிடங்கள்

(C) 25 நிமிடங்கள்

(D) 600 நிமிடங்கள்

(E) விடை தெரியவில்லை

81. பொதுவான கட்டுமான கல்லான லேட்டிரைட்டின் அழுத்த சக்தி என்பது ———————— ஆகும்.

(A) 300 முதல் 350 நியூட்டன்/மிமீ$^2$

(B) 153 முதல் 189 நியூட்டன்/மிமீ$^2$

(C) 70 முதல் 150 நியூட்டன்/மிமீ$^2$

(D) 1.8 முதல் 3.2 நியூட்டன்/மிமீ$^2$

(E) விடை தெரியவில்லை

82. IS 456-2000 யூனிட் எடையின்படி சாதாரண சிமெண்ட் கான்கிரீட்டின் எடை ———— ஆகும்.

(A) 24 கி.நியூட்டன்/மீ$^3$

(B) 25 கி.நியூட்டன்/மீ$^3$

(C) 24 கி.நியூட்டன்/மீ$^2$

(D) 25 கி.நியூட்டன்/மீ$^2$

(E) விடை தெரியவில்லை

83. மையத்தில் புள்ளி சுமையுடன் கூடிய எளிய ஆதரவு கொண்ட கம்பியின் அதிகபட்ச வளைவு ———————— ஆகும்.

$\delta_{\max}$ = அதிகபட்ச வளைவு

$W$ = மையத்தில் உள்ள புள்ளி சுமை

$L$ = கம்பியின் நீளம்

$E$ = பொருளின் யங்கின் நிலைத்தன்மை மாறி

$I$ = பகுதியின் கோணம் தரம்

(A) $\delta_{\max} = WL^3/24EI$

(B) $\delta_{\max} = WL^2/24EI$

(C) $\delta_{\max} = WL^2/48EI$

(D) $\delta_{\max} = WL^3/48EI$

(E) விடை தெரியவில்லை

84. IS 456 ன் படி, மூலைகள் கீழே பிடிக்கப்பட்ட இரு வழி தகடுகள் ஒவ்வொரு திசையிலும் நடுப்பட்டைகள் மற்றும் விளிம்புப் பட்டைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. இதில் நடுப்பட்டையின் அகலம் என்ன?

(A) தகட்டின் அகலத்தின் மூன்று நான்கில் ஒரு பங்கு

(B) தகட்டின் அகலத்தின் பாதி

(C) தகட்டின் அகலத்தின் நான்கு ஐந்தில் ஒரு பங்கு

(D) தகட்டின் அகலத்தின் இரண்டு மூன்றில் ஒரு பங்கு

(E) விடை தெரியவில்லை

85. இரு வழி அடுக்கின் பகுப்பாய்வு பின்வரும் எந்த முறையால் செய்யப்படுகிறது

(a) மார்க்ஸ் முறை

(b) பிகோட்ஸ் முறை

(A) (b) மட்டும்

(B) (a), (b) இல்லை

(C) (a) மற்றும் (b) இரண்டும்

(D) (a) மட்டும்

(E) விடை தெரியவில்லை

86. ஒரு நிலையான V-வகை கொக்கியின் நங்கூர மதிப்பு பட்டையின் வட்டத்தில் ________ மடங்குக்கு சமமாகும்.

(A) 8

(B) 16

(C) 4

(D) 2

(E) விடை தெரியவில்லை

87. வளைவின் சமன்பாடு என்பது ———— ஆகும்.

$\sigma =$ வளைவுமை

$M =$ வளைவு தரம்

$I =$ கட்டுபடுத்தல் தரம்

$y =$ நியூட்ரல் அச்சிலிருந்து வளைவுமை அளவிடும் இடத்தின் தொலைவு

(A) $\sigma = M/Iy$

(B) $\sigma = MI/y$

(C) $\sigma = My/I$

(D) $\sigma = MyI$

(E) விடை தெரியவில்லை

88. விஷ்ணுவிற்கு 'நாராயணன்' எனப் பெயர் வரக் காரணம் யாது?

(A) பாம்பின் மீது படுத்திருப்பதால்

(B) கருடன் மீது அமர்ந்திருப்பதால்

(C) நீரிலே துயில்வதால்

(D) தாமரையை கையில் ஏந்தியிருப்பதால்

(E) விடை தெரியவில்லை

89. 'தேரவாத பௌதத்தினை' இப்படியும் அழைப்பர்

(A) ஹீனயானம்

(B) மகாயானம்

(C) யோகசாரம்

(D) சௌதாந்திரகம்

(E) விடை தெரியவில்லை

90. முழு நீளத்திலும் சமமான சுமையுடன் கூடிய காண்டிலிவுர் கம்பியில், விடுபட்ட முனையின் சாய்வு கோணம் ________ ஆகும்.

$w =$ சமமான சுமை

$l =$ கம்பியின் நீளம்

$E =$ யங்கின் நிலைத்தன்மை மாறி

$I =$ பகுதியின் கோணம் தரம்

(A) $\theta = \frac{wl^3}{8EI}$

(B) $\theta = \frac{wl^4}{8EI}$

(C) $\theta = \frac{wl^3}{6EI}$

(D) $\theta = \frac{wl^2}{6EI}$

(E) விடை தெரியவில்லை

91. கீழ்க்கண்டவற்றுள் அதிகமான கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்ட மாநிலத்தை கூறுக.

(A) தமிழ்நாடு

(B) ஆந்திர நாடு

(C) கர்நாடகா

(D) மத்திய பிரதேசம்

(E) விடை தெரியவில்லை

92. தமிழகத்தில் பல்லவர் செப்பேடுகள் என்னும் வரிசையில் இது வரை மொத்தம் கிடைத்துள்ள செப்பேடுகளில் பாதிக்குமேல் உள்ள செப்பேடுகள் இத்தகைய மொழிச் செப்பேடுகள் __________ எனப்படும்

(A) பிராகிருத-மொழி

(B) தமிழி-மொழி

(C) கிராந்தம்-மொழி

(D) பிராமி-மொழி

(E) விடை தெரியவில்லை

93. புகழூர் ‘தமிழி’ கல்வெட்டின் காலம்

(A) கி.மு. 3ம் நூற்றாண்டு

(B) கி.பி. 3ம் நூற்றாண்டு

(C) கி.மு. 5ம் நூற்றாண்டு

(D) கி.பி. 5ம் நூற்றாண்டு

(E) விடை தெரியவில்லை

94. பொருத்துக.

(a) அன்பில் செப்பேடு — 1. முதலாம் பராந்தகன் காலம்

(b) பெரிய லெயிடன் செப்பேடு — 2. முதலாம் இராஜேந்திரன் காலம்

(c) திருவாலங்காடு செப்பேடு — 3. முதலாம் இராஜராஜன் காலம்

(d) உதயேந்திரம் செப்பேடு — 4. சுந்தரசோழன் காலம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

(E) விடை தெரியவில்லை

95. தமிழகத்தில் தற்கால கிரந்த எழுத்துக்களின் காலமாக கருதப்படுவது

(A) சுமார் கி.பி 1050ம் ஆண்டுக்கு பிற்பட்ட காலத்தை சேர்ந்தவை

(B) சுமார் கி.பி. 1250ம் ஆண்டுக்கு பிற்பட்ட காலத்தை சேர்ந்தவை

(C) சுமார் கி.பி. 850ம் ஆண்டுக்கு பிற்பட்ட காலத்தை சேர்ந்தவை

(D) சுமார் கி.பி. 650ம் ஆண்டுக்கு பிற்பட்ட காலத்தை சேர்ந்தவை

(E) விடை தெரியவில்லை

96. தமிழ்நாட்டில் கிடைக்கும் பழைய கால கிரந்த எழுத்துக்களின் காலமாக கருதப்படுவது

(A) கி.பி. 500 ஆண்டுக்கு முற்பட்டவை

(B) கி.பி. 300 ஆண்டுக்கு முற்பட்டவை

(C) கி.பி. 100 ஆண்டுக்கு முற்பட்டவை

(D) கி.பி. 700 ஆண்டுக்கு முற்பட்டவை

(E) விடை தெரியவில்லை

97. வட்டெழுத்தின் உயிர் எழுத்துகளில் ஒன்றான 'ஐ' யின் வடிவம் முதன் முதலில் காணப்படும் கல்வெட்டாக கருதப்படுவது —————— கல்வெட்டாகும்.

(A) திருநாதர்க்குன்று கல்வெட்டு

(B) பிள்ளையார்பட்டி கல்வெட்டு

(C) எடக்கல் கல்வெட்டு

(D) தாமரைக்கரை கல்வெட்டு

(E) விடை தெரியவில்லை

98. கீழ்க்கண்டவற்றுள் தொல்லியல் ஆய்வு நடந்த மாமல்லபுரம் அருகில் உள்ள ஊரை கண்டறிக.

(A) மாங்குடி

(B) வசவசமுத்திரம்

(C) தேரிருவேலி

(D) அழகன்குளம்

(E) விடை தெரியவில்லை

99. 'எபிகிராபிகா இண்டிகா' என்ற நூலை வெளியிட்டவர்

(A) ஜேம்ஸ் பர்கீஸ்

(B) இராபர்ட் சீவல்

(C) லார்டு லிட்டன்

(D) கர்சன் பிரபு

(E) விடை தெரியவில்லை

100. எரிமலைகள் வெடித்துச் சிதறும் போது வெளிப்படும் சாம்பல் பெயர் என்ன?

(A) சாதாரண சாம்பல்
(B) புகை சாம்பல்
(C) தெப்ரா சாம்பல்
(D) கரி சாம்பல்
(E) விடை தெரியவில்லை

101. பூஞ்சேரியில் காணப்படும் கல்வெட்டுகளின் எண்ணிக்கையை குறிப்பிடுக.

(A) 2 கல்வெட்டுகள்
(B) 3 கல்வெட்டுகள்
(C) 7 கல்வெட்டுகள்
(D) 8 கல்வெட்டுகள்
(E) விடை தெரியவில்லை

102. எவ்விதமான தடயங்களோ தொல்பொருட்களோ காணப்படாத பகுதியே __________ ஆகும்.

(A) கரிசல்மண்
(B) செம்மண்
(C) கன்னிமண்
(D) வண்டல்மண்
(E) விடை தெரியவில்லை

103. தஞ்சாவூரில், நீரகழாய்வு மையம் தொடங்கப்பட்ட ஆண்டு எது?

(A) 1958
(B) 1974
(C) 1983
(D) 1985
(E) விடை தெரியவில்லை

104. பண்டைய தொல்லியல் மரபுச் சின்னங்கள் பாதுகாப்பு சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

(A) 1900
(B) 1904
(C) 1919
(D) 1935
(E) விடை தெரியவில்லை

105. கொற்கையில் நடந்த அகழாய்வில் கிடைத்த அடுப்புக் கரியின் காலம்

(A) கி.மு. 785

(B) கி.மு. 650

(C) கி.மு. 450

(D) கி.மு. 350

(E) விடை தெரியவில்லை

106. ஓர் ஆலயத்தை புதிதாகக் கட்டி, அனுக்ஞை முதல் கும்பாபிடேகம் வரை செய்து முடிக்கும் நிர்மாண முறையின் பெயர் என்ன?

(A) அந்தரிதம்

(B) அநாவர்த்தம்

(C) புனராவர்த்தம்

(D) ஆவர்த்தம்

(E) விடை தெரியவில்லை

107. பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் அமைக்கப்பட்டுள்ள கம்பிவட ஊர்தி எந்த பணியின் கீழ்வரும் என்பதை அடையாளப்படுத்துக.

(A) நிர்வாகம்

(B) திருப்பணி

(C) திருக்கோயில் சேவை

(D) திரு உபயம்

(E) விடை தெரியவில்லை

108. மூலஸ்தானத்தின் மீது உயர்ந்து நிற்கும் கட்டிடம்

(A) விமானம்

(B) கோபுரம்

(C) பிரகாரம்

(D) மண்டபம்

(E) விடை தெரியவில்லை

109. இந்து பரிபாலன சட்ட மசோதாவை அறிமுகப்படுத்திய ஆண்டு

(A) 1925

(B) 1928

(C) 1930

(D) 1932

(E) விடை தெரியவில்லை

110. கர்ப்பக் கிரகத்தில் நிலையாக ஸ்தாபிக்கப்படும் படிமம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) உற்சவப்படிமம்

(B) ஆயாதி

(C) மூலப்படிமம்

(D) கௌதுக பேரம்

(E) விடை தெரியவில்லை

111. பல்லவர் காலத்தில், கோயிலில் பணி புரிவோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

(A) ஆழ்வார்கள்

(B) கோயில் பரிவாரம்

(C) நாயன்மார்கள்

(D) சிவனடியார்கள்

(E) விடை தெரியவில்லை

112. 'தளி' என்பதன் பொருள் யாது?

(A) வீடு

(B) அரண்மனை

(C) கோயில்

(D) யானை

(E) விடை தெரியவில்லை

113. இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான, கோயில்களில் உள்ள சிற்பம், ஓவியம் மற்றும் கல்வெட்டுகளை சரிசெய்யவோ, புதுப்பிக்கவோ யாரிடம் அனுமதி பெற வேண்டும்?

(A) உதவி பொறியாளர்

(B) ஆணையர்

(C) மண்டல பொறியாளர்

(D) நிர்வாக பொறியாளர்

(E) விடை தெரியவில்லை

114. திருக்கோயிலின் கல் கட்டுமானங்களில் ஏற்படும் சிதைவுகளை எதன் மூலம் சரி செய்யலாம்?

(A) மரங்கள்

(B) வரைபடங்கள்

(C) பச்சிலை

(D) சுண்ணாம்பு, கூழ்மரம்

(E) விடை தெரியவில்லை

115. கட்டடங்கள் மழையிலும், வெயிலிலும் காய்ந்து நாளடைவில் கருமையாக காரணமான காளான்களை அகற்ற இதனைப் பயன்படுத்தலாம்.

(A) நைட்ரிக் அமிலம்

(B) அமோனியா கரைசல்

(C) சோடியம்

(D) பொட்டாசியம்

(E) விடை தெரியவில்லை

116. சிவாச்சாரியனையும் சிற்பியையும் பூஜிக்க வேண்டும் என கூறும் ஆகமம்

(A) காரண ஆகமம்

(B) காமிக ஆகமம்

(C) தீப்த ஆகமம்

(D) விமலம் ஆகமம்

(E) விடை தெரியவில்லை

117. சோழர்கள் காலத்தில் திருக்கோயில்களை புதுப்பித்த பெருமையுடைய சோழ அரசியார்

(A) சுந்தர மகாதேவியார்

(B) வானவன் மாதேவியார்

(C) செம்பியன் மாதேவியார்

(D) மூன்றாம் குந்தவை

(E) விடை தெரியவில்லை

118. பழைய செங்கற் கோயில்களை இடித்து கற்றளியாகப் புதுப்பித்தவர்கள்

(A) சேரர்கள்

(B) சோழர்கள்

(C) ஆழ்வார்கள்

(D) நாயன்மார்கள்

(E) விடை தெரியவில்லை

119. திருக்கோயிலில் திருடர்கள் பிரவேசித்தால் நடத்தப்படும் கிரியை

(A) அராவர்த்தனம்

(B) ஆவர்த்தனம்

(C) புனராவர்த்தனம்

(D) அந்தரிதம்

(E) விடை தெரியவில்லை

120. கோயில் சீரமைப்புப் பணிகளில் யார் ஆலோசனை வழங்குவார்கள்?

(A) பொது மக்கள்

(B) IAS அதிகாரிகள்

(C) ஸ்தபதிகள் மற்றும் சிவாச்சாரியார்கள்

(D) துறவிகள்

(E) விடை தெரியவில்லை

121. கீழ்க்காணும் எந்த துறையினர் கோயில் நிர்மானத்தில் தொடர்புடையவர்கள்?

(A) சித்தர்கள்

(B) இயற்கை ஆராய்ச்சியாளர்கள்

(C) நளினியக்க நிபுணர்கள்

(D) வேத பாடசாலை ஆசிரியர்கள்

(E) விடை தெரியவில்லை

122. கோயில் புனர்நிர்மானத்திற்கான நிதி எவ்வாறு திரட்டப்படுகிறது?

(A) விற்பனை மூலம்

(B) வரி வசூலித்தல் மூலம்

(C) தானங்களின் மூலம்

(D) வேதிக்கைகளின் மூலம்

(E) விடை தெரியவில்லை

123. கோயில் புனர்நிர்மானம் செய்யும்போது கடைபிடிக்க வேண்டிய விதி எது?

(A) ஆகம விதி

(B) சுத்தி விதி

(C) சிதம்பர விதி

(D) தந்திர விதி

(E) விடை தெரியவில்லை

124. பொருத்துக

(a) நீளம் — 1. பிரமாணம்

(b) அகலம் — 2. பரிமானம்

(c) உயரம் — 3. மானம்

(d) சுற்றளவு — 4. உன்மானம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

125. திருக்கோயில் உபரிநிதியை, நிதி தேவையான கோயிலுக்கு வழங்கும் சட்டம் பிரிவு எது?

(A) Sec. 36

(B) Sec. 42

(C) Sec. 50

(D) Sec. 51

(E) விடை தெரியவில்லை

126. சிவலிங்கமானது அடியிலிருந்து மேல்நோக்கி பிரம்ம பாகம், விஷ்ணு பாகம், ருத்ர பாகம் என்று மூன்று அங்கங்களாக ஒரே அமைப்பில் செய்யப்படும். இம்மூன்று அங்கங்களும் அமையப்பெற்றது

(A) சுயம்பு லிங்கம்

(B) பாண லிங்கம்

(C) மானுஷ லிங்கம்

(D) பகவதி

(E) விடை தெரியவில்லை

127. குடமுழுக்கு நிகழ்வில் முக்கியமானது எது?

(A) திருவிழா நடத்துதல்

(B) கலசங்களில் இருந்து நீர் பரப்புதல்

(C) தேர் ஓட்டுதல்

(D) வேதபாராயணம்

(E) விடை தெரியவில்லை

128. கூற்று [A]: கோயிற் திருப்பணி மூன்று நிலைகளை உடையது.

காரணம் [R] : பாதுகாத்தல், புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்துதல் என்பவை மூன்று நிலைகள் ஆகும்.

(A) [A] என்பது சரி, ஆனால் [R] என்பது தவறு

(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி; மேலும் [R] என்பது [A] விற்கான சரியான விளக்கமாகும்.

(C) [A] என்பது தவறு, [R] என்பது சரி

(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [R] என்பது [A] விற்கான விளக்கமல்ல என்பது சரி.

(E) விடை தெரியவில்லை

129. பழைய கோயில்களைப் புதுப்பிக்கும் போது அக்கோயில்களில் இருக்கும் _________ பாதுகாக்கப்பட வேண்டும்.

(A) சாசனங்கள் (B) மதிற்சுவர்கள்

(C) குளங்கள் (D) சிலைகள்

(E) விடை தெரியவில்லை

130. திருக்கோயிலுள்ள மரச்சிற்பங்களைப் பாதுகாக்க பயன்படுத்தப்படும் எண்ணெய் எது ?

(A) தேங்காய் எண்ணெய் (B) கடலை எண்ணெய்

(C) இலுப்பை எண்ணெய் (D) சோயா எண்ணெய்

(E) விடை தெரியவில்லை

131. சங்க இலக்கிய நூலான _________ நூலில் "பாண்டிமாதேவி படுத்திருந்த கட்டிலின் மேல்விதானத்துத் திரைச் சீலையில் "ஓவியம்" தீட்டியிருப்பதை கூறுகிறது. இது கட்டடச்சிற்பம் என்று சொல்லுமளவிற்குக் கலைப் பிணைப்புக்கு சான்றாகும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

(A) மதுரைக்காஞ்சி (B) நெடுநல்வாடை

(C) சிலப்பதிகாரம் (D) நற்றிணை

(E) விடை தெரியவில்லை

132. "திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பின்
தருமணன் நெமிரிய திருநகர் முற்றத்து" அழகிய மனையின் முற்றத்தில் மணல் பரப்பும் வழக்கம் இருந்தது என கூறும் நூல் _________ ஆகும்.

(A) பெரும்பாணாற்றுப்படை (B) அகநானூறு

(C) மதுரைக்காஞ்சி (D) நெடுநல்வாடை

(E) விடை தெரியவில்லை

133. “விண்ணுற ஓங்கிய பல்படைப் புரிசை” என்று நகர அமைப்பின் சிறப்பான மதில்கள் பற்றி கூறும் நூல் __________ ஆகும்.

(A) மதுரைக் காஞ்சி

(B) சிலப்பதிகாரம்

(C) நெடுநல்வாடை

(D) பரிபாடல்

(E) விடை தெரியவில்லை

134. “எண்ணிய நூலோர்,” என்ற தொடருக்கு அடியார்க்கு நல்லார் விளக்கம் எழுதும் போது எண்ணப்பட்ட சிற்ப நூலாசிரியர் வகுத்த இயல்புகளின் வழுவாத வகையில் அரங்கு கட்டுவதற்கு குற்றங்கள் இல்லாத நிலத்திலே-நிலம் வகுத்துக் கொள்ளலாம் என்று __________ நூலில் உள்ளது.

(A) சிலப்பதிகாரம்

(B) சீவகசிந்தாமணி

(C) மணிமேகலை

(D) நெடுநல்வாடை

(E) விடை தெரியவில்லை

135. (1) கரக்கோயில் (2) ஞாழற்கோயில் (3) கொகுடிக்கோயில் (4) இளங்கோயில் (5) மணிக்கோயில் (6) ஆலக்கோயில் என்னும் ஆறு வகை கோயில்களை கூறும் நூல் __________ ஆகும்.

(A) திருவாசகம்

(B) தேவாரம்

(C) மயமதம்

(D) மதுரைக்காஞ்சி

(E) விடை தெரியவில்லை

136. “நிலவுப் பயன்கொள்ளும் நெடுவெண்முற்றதுக்
கிம்புரிப் பகுவா யம்பண நிறையக்
கலுழ்ந்து வீழருவிப் பாடுவிறந்தயல............” எனப்படும் முற்றத்து செயற்கை அருவி அமைத்ததை கூறும் நூல் எதுவாகும்?

(A) நெடுநல்வாடை

(B) அகநானூறு

(C) சிலப்பதிகாரம்

(D) மணிமேகலை

(E) விடை தெரியவில்லை

137. “மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீரூர் – பூவின்
இதழ்கத் தனைய தெருவம் இதழகத்
தரும் பொகுட் டணைத்தே அண்ணல் கோயில்”
– என்று மதுரை நகர அமைப்பை பற்றி கூறும் நூல் __________ ஆகும்.

(A) நற்றிணை
(B) மதுரை காஞ்சி
(C) நெடுநல்வாடை
(D) பரிபாடல்
(E) விடை தெரியவில்லை

138. உபாசனம் செய்யத் தகுதி படைத்தோர் – உள்ளத்தில் உறையும் திருமேனி __________ எனப்படும்.

(A) விபவம்
(B) பாவம்
(C) அர்ச்சகம்
(D) அந்தர்யாமி
(E) விடை தெரியவில்லை

139. கும்பாபிஷேகம் நடந்த மறுதினம் முதல் 48 நாட்கள் பூஜை, ஹோமம், அபிஷேகம் செய்து உபசரித்தலே __________ ஆகும்.

(A) பிராயச்சித்த அபிஷேகம்
(B) ஜலாதிவாசம்
(C) மண்டலாபிஷேகம்
(D) வாஸ்து சாந்தி செய்தல்
(E) விடை தெரியவில்லை

140. “விபவம்” (ஒப்பற்ற பிறப்பு) அவதாரங்களில் சிறப்பாக உள்ளவை __________ ஆகும்.

(A) 10 அவதாரங்கள்
(B) 8 அவதாரங்கள்
(C) 7 அவதாரங்கள்
(D) 6 அவதாரங்கள்
(E) விடை தெரியவில்லை

141. வைணவ மரபில் படிமங்கள் ‘மூன்று’ வகைப்படும் (திருமேனிகள்) அவை யாவன?

(A) பாலம், யௌவனம், விருத்தம்
(B) கர்மம், பிம்பம், பேரம்
(C) நிற்கும், அமருதல், சயனம்
(D) துருவம், பிம்பம், ஸ்தாவரம்
(E) விடை தெரியவில்லை

142. விண்ணிலிருந்து மண்மீது வந்திநேங்கிய ‘அவதாரக்-கோலத்தையே’ __________ என்பர்.

(A) பரம்
(B) விபவம்
(C) அர்ச்சா
(D) வியூகம்
(E) விடை தெரியவில்லை

143. ‘எட்டு’ கரங்களைக் கொண்ட படிமம் – என்றும் படிம இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது.

(A) குக்ஷமம்
(B) ஸ்தூலம்
(C) சாத்விகம்
(D) பரம்
(E) விடை தெரியவில்லை

144. “கோயிலின் கட்டுமானப் பாகங்களைப் புதுபித்தல், புதியதாக சிறு, சிறு கோயில்களைக் கோயிலுக்குள் அமைத்தல்” ஆகிய செயல்களுக்கு __________ பிரதிஷ்டை எனப்படும்.

(A) அந்தரிதப் பிரதிஷ்டை
(B) புனராவர்தனப் பிரதிஷ்டை
(C) ஆவர்தனப் பிரதிஷ்டை
(D) அநாவர்த்தனப் பிரதிஷ்டை
(E) விடை தெரியவில்லை

145. வைஷ்ணவ வழிபாட்டு முறையில் - மண்ணால், சுதையால், மரத்தால் செய்யப்பட்டு வண்ணம் தீட்டப்பட்டிருக்கும் படிமம் ———————— எனப்படும்.

(A) பிரமோதம்
(B) திவ்ய பேரம்
(C) கர்ம பிம்பம்
(D) துருவ பேரம்
(E) விடை தெரியவில்லை

146. ஆகமங்களில் – ஜங்கமப்படிமங்களில் – திருமஞ்சனத்திற்கு என்று இருக்கும் தனித்தொரு படிமத்திற்கு ___________ என்றும் கூறுவர்.

(A) கர்மார்ச்சை
(B) ஸ்நாபனார்ச்சை
(C) தீர்த்தார்ச்சை
(D) பவியர்ச்சை
(E) விடை தெரியவில்லை

147. பிரகிருதியிலிருந்து (லக்ஷ்மி, விஷ்ணுவின் துணைவியாக இருக்கும் தன்மை) தோன்றியவைகள் எல்லாம் ___________ குணங்கள் கொண்டவை.

(A) நிமித்த குணங்கள்
(B) விகார குணங்கள்
(C) புருஷ குணங்கள்
(D) பௌஷ்ணி குணங்கள்
(E) விடை தெரியவில்லை

148. வியோம நிலையத்தில் – பேதமும் – ரூபங்களும் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (M) | விஷ்ணு | (I) | வைகுண்டத்தில் |
| (N) | மகாவிஷ்ணு | (II) | ஆமோதத்தில் |
| (O) | ஸ்தாவிஷ்ணு | (III) | பிரமோதத்தில் |
| (P) | நாராயணன் (ஸர்வ வியாபி) | (IV) | ஸம்மோதத்தில் |

| | (M) | (N) | (O) | (P) |
|---|---|---|---|---|
| (A) | (I) | (II) | (IV) | (III) |
| (B) | (III) | (II) | (I) | (IV) |
| (C) | (II) | (III) | (IV) | (I) |
| (D) | (II) | (IV) | (III) | (I) |

(E) விடை தெரியவில்லை

149. பாஞ்சராத்ர ஆகமத்தில் (வைகானசம்) "கையினால் செதுக்கியமைத்த உருவத்தை __________ என்றும் ஆகமங்கள் பாகுபடுத்தி கூறுகின்றன.

(A) உருவம்
(B) லிங்கம்
(C) பிம்பம்
(D) பிரதிமை
(E) விடை தெரியவில்லை

150. சைவ ஆகமங்களும் – சதாசிவமூர்த்தியின் அங்கங்களும் சரியாக பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (M) | சந்தானம் | (I) | இரத்னாபரணங்கள் |
| (N) | பாரமேசம் | (II) | திருப்பரி வட்டம் |
| (O) | கிரணம் | (III) | குண்டலம் |
| (P) | வாதுளம் | (IV) | ஆரம் |

| | (M) | (N) | (O) | (P) |
|---|---|---|---|---|
| (A) | (III) | (II) | (IV) | (I) |
| (B) | (III) | (IV) | (I) | (II) |
| (C) | (IV) | (III) | (II) | (I) |
| (D) | (I) | (II) | (IV) | (III) |

(E) விடை தெரியவில்லை

151. ஆகமங்களில் பல விதமான வழிபாட்டு முறையில் இன்றியமையாத இரண்டு வழிபாட்டு முறைகள் இவை ஆகும்

(A) ஆலய வழிபாடு, ஆத்மார்த்த வழிபாடு

(B) அகவழிபாடு, புற வழிபாடு

(C) உருவ வழிபாடு, அருவ வழிபாடு

(D) குரு வழிபாடு, கும்ப வழிபாடு

(E) விடை தெரியவில்லை

152. ‘வைகானஸ’ ஆகமம் பின்பற்றப்படும் இரண்டு கோவில்கள் ஆவன

(A) திருப்பதி – வேங்கடாசலபதி கோயில், ஸ்ரீரங்கம்–ரங்கநாதர் கோயில்

(B) ஸ்ரீபெரும்புதூர் – ஸ்ரீ இராமானுஜர் கோயில், திருப்பதி–வேங்கடாசலபதி கோயில்

(C) காஞ்சி வரதராஜ பெருமாள் கோயில், ஸ்ரீரங்கம்–ரங்கநாதர் கோயில்

(D) ஸ்ரீரங்கம்–ரங்கநாதர், ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில்

(E) விடை தெரியவில்லை

153. பௌத்த சமயத்தில் ‘திரிபீடகம்’ என்பது ———— குறிப்பதாகும்

(A) ஆகமம்

(B) வினய பீடம்

(C) பர்வே ஆகமம்

(D) பகுஸ்ருதி ஆகமம்

(E) விடை தெரியவில்லை

154. பாஞ்சராத்ர சம்ஹதைகளில் மூன்று முக்கிய சம்ஹிதைகள் ‘இரத்தினத்திரயம்’ எனப்படும்

(A) ஸாஸ்வதம், பௌஷ்கரம், ஜயாக்யம்

(B) வியுக, விபவ, அந்தர்யாமி

(C) மானாதிகாரம், யஞ்ஞாதிகாரம், சித்ராதிகாரம்

(D) பூர்வதந்திரம், உத்ரதந்திரம், விஷ்ணுதந்திரம்

(E) விடை தெரியவில்லை

155. ஈச்வர சம்ஹிதையில் பாஞ்சராத்ர ஆகமம், இயற்றிய ஐந்து ஆசிரியர்களில் இரண்டு ஆசிரியர்கள் இயற்றிய நூல்கள் மட்டுமே (அதிகமாக) கிடைத்துள்ளன

(A) கௌசிகர், பரத்வாஜர் இயற்றிய பாடங்கள்

(B) சாண்டில்யர், பரத்வாஜர் இயற்றிய பாடங்கள்

(C) ஔபாக்யானர், மஞ்சியாயனர் இயற்றிய பாடங்கள்

(D) சாண்டில்யர், கௌசிகர் இயற்றிய பாடங்கள்

(E) விடை தெரியவில்லை

156. மத்தியப் பிரதேசம் குடைவரை எண் 6-ல் இடது பக்கச் சுவரில் காணப்படும் புடைப்புச் சிற்பங்கள் முறையே

(A) துவார பாலகர், கார்த்திகேயன், மகிஷாசுரமர்தினி

(B) துவார பாலகர், மகிஷாசுரமர்தினி, விஷ்ணு

(C) துவார பாலகர், மகிஷாசுரமர்தினி, சூரியன்

(D) துவார பாலகர், கார்த்திகேயன், சூரியன்

(E) விடை தெரியவில்லை

157. மத்தியப் பிரதேசம் உதயகிரி குடைவரையில் கங்கை மற்றும் யமுனை நதிக்கடவுளரின் பாதங்களைத் தாங்கிக் கொண்டிருக்கும் வாகனங்கள்

(A) ஆமை மற்றும் நண்டு

(B) நண்டு மற்றும் மகரம்

(C) மகரம் மற்றும் ஆமை

(D) ஆமை மற்றும் தவளை

(E) விடை தெரியவில்லை

158. 'சில்பபிரகாசம்' என்ற ஒரிசா சிற்ப நூல் கோயில்களில் அமையும் சிற்பப் பதுமைகளை எவ்வாறு பெயரிட்டு அழைக்கிறது ?

(A) அலஸ்ய கன்னிகா

(B) சுரசுந்தரி

(C) தேவகன்னிகா

(D) சால பஞ்சிகா

(E) விடை தெரியவில்லை

159. ஒரிசாவில் ஒட்டகச் சிவிங்கியைப் பரிசளிக்கும் சிற்பம் எந்த கோயிலில் உள்ளது?

(A) சூரியனார் கோயில் – கொனார்க்

(B) சௌசத் யோகினி கோயில் – ஹீராப்பூர்

(C) லிங்கராஜா கோயில் –புவனேஷ்வர்

(D) ஜகன்னாதர் கோயில் – பூரி

(E) விடை தெரியவில்லை

160. ஒரிசா கோயில் கட்டடக்கலையில் 'அங்கசிருங்காஸ்' எந்த பகுதியில் அமையும்?

(A) ராக பாகா

(B) அனுராக பாகா

(C) மஸ்தகா

(D) போத்தலா

(E) விடை தெரியவில்லை

161. ஒரிசா கட்டடக்கலையின் 'ரத்தினம்' என்று எந்த கோயிலைக் கூறலாம்?

(A) முக்தேஸ்வரா கோயில்

(B) லிங்கராஜா கோயில்

(C) ராஜாராணி கோயில்

(D) ஜகந்நாதா கோயில்

(E) விடை தெரியவில்லை

162. பாமியான் புத்தர் சிலை யார் காலத்தைச் சார்ந்தது?

(A) மௌரியர்

(B) சுங்கர்

(C) குப்தர்

(D) குஷாணர்

(E) விடை தெரியவில்லை

163. குப்தர்களின் தசாவதார கட்டுமானக் கோயில் எங்குள்ளது ?

(A) மதுரா
(B) விதர்ப்பா
(C) தியோகர்
(D) பாட்னா
(E) விடை தெரியவில்லை

164. புத்தரின் வாயிற்காப்பாளர்களில் ஒருவராக இவரைக் கொள்ளலாம்.

(A) பத்ம பாணி
(B) சாக்கிய முனி
(C) மாதங்கி
(D) மைத்ரேயா
(E) விடை தெரியவில்லை

165. மதுரா அருங்காட்சியகத்தில் உள்ள கார்த்திகேயன் சிற்பம் யார் காலத்தைச் சார்ந்தது ?

(A) சந்திர குப்தர்
(B) அசோகர்
(C) கனிஷ்கர்
(D) புஷ்யமித்ரர்
(E) விடை தெரியவில்லை

166. இந்தியா மீது படையெடுத்த ஹுணர் தலைவனான மிஹிரகுலன் சுமார் 1600 ஸ்தூபிகளையும், விஹாரங்களையும் தகர்த்தெறிந்ததாகக் கூறும் காஷ்மிரிய வரலாற்று இலக்கியம்

(A) வாசவதத்த
(B) பாயசக்கடா
(C) ராஜதரங்கினி
(D) விக்ரமோர்வசியம்
(E) விடை தெரியவில்லை

167. காந்தாரக் கலையை எந்த கலைகளின் இணைப்பாகக் கொள்ளலாம் ?

(A) கிரேக்க ஆப்கானிய கலை
(B) ரோம இந்தியக் கலை
(C) கிரேக்க சீனக்கலை
(D) கிரேக்க இந்தியக்கலை
(E) விடை தெரியவில்லை

168. வேத கால ஆசிரியர்கள் தங்களையும் தங்கள் உடமைகளையும் பாதுகாக்க எந்த வகையிலான வேலியை அமைத்துக் கொண்டனர்?

(A) கல்வேலி

(B) மூங்கில் வேலி

(C) இரும்பு வேலி

(D) மரவேலி

(E) விடை தெரியவில்லை

169. சென்னை தேசிய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள புத்தரின் திருவடிகளைத் தாங்கிய பீடத்தை பெண்கள் வளைந்தும் நெளிந்தும் வழிபடும் சிற்பப் படைப்பு எங்கிருந்து கொண்டுவரப்பட்டது?

(A) சாஞ்சி

(B) அமராவதி

(C) சாரநாத்

(D) தௌலி

(E) விடை தெரியவில்லை

170. ஆந்திராவில் அமைந்துள்ள பௌத்த மதத்தோடு தொடர்புடைய மிகப்பழமையான நகரம்

(A) விஜயவாடா

(B) குண்டூர்

(C) மசூலிப்பட்டினம்

(D) அமராவதி

(E) விடை தெரியவில்லை

171. வைசேஷிக தரிசனம் பற்றிய சரியான கூற்றை கண்டறிக.

(i) வைசேஷிகம் என்பது 'விசேஷம்' என்ற வேர்ச்சொல்லில் பெறப்பட்டது அதன் பொருள் சிறப்புத்தன்மை

(ii) வைசேஷிகம் உலகப்பொருட்களை பதினாறு பதார்த்தங்களாக வகை பிரிக்கிறது.

(iii) வைசேஷிகம் அணுப் பன்மைக் கொள்கையை ஏற்கிறது

(A) (i) மட்டும்

(B) (ii) மட்டும்

(C) (i) மற்றும் (iii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

172. வைசேஷிகம் தரிசனத்தில் இன்மை அதன் பொருளுடன் பொருத்துக

| | இன்மை | | பொருள் |
|---|---|---|---|
| (a) | பிராகபாவம் | 1. | அழிவுக்குப் பின் இன்மை |
| (b) | பிரத்வம்சபாவம் | 2. | தோன்றும் முன் இன்மை |
| (c) | அன்னோன்யபாவம் | 3. | முற்றிலும் இன்மை |
| (d) | அத்யந்தபாவம் | 4. | ஒன்றில் ஒன்று இன்மை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

173. பொருத்துக

| | ஆசிரமம் | | நிலை |
|---|---|---|---|
| (a) | பிரம்மச்சரியம் | 1. | மாணவநிலை |
| (b) | கிருஹஸ்தம் | 2. | இல்வாழ்க்கை நிலை |
| (c) | வான பிரஸ்தம் | 3. | முற்றும் துறந்த நிலை |
| (d) | சந்யாசம் | 4. | இல்லறத் துறந்த நிலை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 1 | 2 | 4 | 3 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

174. சாங்கியத்தில் கூற்றுப்படி அறிவே சொருபமானது ———————— எனக் கருதப்படும்.

(A) புருடன்

(B) பிரகிருதி

(C) கடவுள்

(D) பிரம்மன்

(E) விடை தெரியவில்லை

175. பொருத்துக

(a) மந்திரங்கள் — 1. ஆழ்ந்த ஆன்மீக உண்மை உரைகள்

(b) பிராமணங்கள் — 2. காடு சென்று தியானம் செய்வது பற்றிய விரிவுரை

(c) ஆரணியங்கள் — 3. மந்திரங்களுக்கான விளக்கங்கள் மற்றும் சடங்குகள்

(d) உபநிடதங்கள் — 4. பாடல்கள்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 1 | 2 | 4 | 3 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

176. சங்க இலக்கியங்களில் 'கடம்பர் செல்வன்' என்பது யாரைக் குறிக்கும்?

(A) சிவபெருமான்
(B) திருமால்
(C) முருகபெருமான்
(D) இந்திரன்
(E) விடை தெரியவில்லை

177. ஜைன பொருள் வகைப்பாடின் அடிப்படையில் தர்மமும், அதர்மமும் எதனை குறிக்கும்.

(A) வெளிச்சம், இருட்டு
(B) சரி, தவறு
(C) நியாயம், அநியாயம்
(D) அசைவும், ஓய்வும்
(E) விடை தெரியவில்லை

178. ஜீவன் என்பது உடலின் வடிவம் எத்தகையதோ அத்தகைய வடிவத்தைத் தானும் பெறும். (எ.கா) எறும்பின் உடலில் நுழையும் ஜீவன் எறும்பின் வடிவத்தை பெரும் என்று கூறும் இந்திய தத்துவம்.

(A) பௌதம்
(B) நியாயம்
(C) வைஷேசிகம்
(D) ஜைனம்
(E) விடை தெரியவில்லை

179. புத்த தியானத்தில் 'சித்த-அநுபாஸநா' என்பது எதைக் குறிக்கும்?

(A) மனதைக் கவனித்தல்
(B) மூச்சைக் கவனித்தல்
(C) உடலைக் கவனித்தல்
(D) உயிரைக் கவனித்தல்
(E) விடை தெரியவில்லை

180. ரிக் வேதத்தில் சூரியன் எத்தனை இடங்களில் விளிக்கப்படுகிறது?

(A) 421
(B) 36
(C) 1008
(D) 108
(E) விடை தெரியவில்லை

181. தானியங்கியாக புதுப்பிக்கப்படும் ஒப்பந்தம் எவ்வாறு அழைக்கப்படும்?

(A) பசுமையான
(B) ஒரே சீரான
(C) மிதமான
(D) தேவைக்கேற்ப
(E) விடை தெரியவில்லை

182. சிறந்த சூழ்நிலைகளில் ஒரு செயல்பாட்டை அடையக்கூடிய மிகக் குறுகிய நேரம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) எதிர்பார்க்கப்படும் காலம்
(B) அவநம்பிக்கையான காலம்
(C) நம்பிக்கையான காலம்
(D) காலம் தாழ்ந்த காலம்
(E) விடை தெரியவில்லை

183. போலி செயல்பாட்டை பொறுத்தவரை கீழ்கண்ட எவை சரியானவை?

(i) இது கற்பனைச் செயல், காலம், செலவு மற்றும் வளங்களை எடுத்துக் கொள்வதில்லை

(ii) பிணைய வரைபடத்தில் புள்ளிக் கோட்டின் மூலம் காண்பிக்கப்படுகிறது

(iii) பிணைய வரைபடத்தில் செயல்களின் வரிசை முறை மாறாமல் இருப்பதற்காக புகுத்தப்படுகிறது

(A) (i) மட்டும் சரி

(B) (i) மற்றும் (ii) மட்டும் சரி

(C) (i) மற்றும் (ii) மற்றும் (iii) சரி

(D) (i) மற்றும் (iii) மட்டும் சரி

(E) விடை தெரியவில்லை

184. ஒரு திட்டத்தின் அனைத்து செயல்களையும் அவைகளுக்கு இடையே உள்ள தொடர்புகளையும் செய்ய வேண்டிய வரிசையில் காண்பிக்க கூடிய படம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) பரவளைய வரைபடம்

(B) வரைத்தாள் வரைபடம்

(C) கூற்றுகள் வரைபடம்

(D) பிணைய வரைபடம்

(E) விடை தெரியவில்லை

185. கீழ்கண்ட எந்த வகையான ஒப்பந்தத்தில் சமநிலையற்ற டெண்டர் ஏற்பட வாய்ப்புள்ளது?

(A) சதவீத விகித ஒப்பந்தம்

(B) மொத்த தொகை ஒப்பந்தம்

(C) பொருள் விகித ஒப்பந்தம்

(D) திருப்பு விசை ஒப்பந்தம்

(E) விடை தெரியவில்லை

186. பின்வருவனவற்றில் திட்டக் கட்டுப்பாட்டின் முறையில் பொருந்தும்

(A) ஒரு குறிப்பிட்ட திட்ட இலக்கு

(B) திட்டத்தின் பட்ஜெட் வரம்பு

(C) திட்டத்தின் தரங்கள்

(D) திட்டத்தின் குழு உறுப்பினர்கள்

(E) விடை தெரியவில்லை

187. பின்வருவனவற்றில் எது பயனுள்ள கட்டுமானத் திட்டமிடலில் முக்கிய காரணியாக உள்ளது?

(A) திறமையற்ற தொழிலாளர்களின் பயன்பாட்டை அதிகப்படுத்தல்

(B) பொருள் வீணாவதைக் குறைத்தல்

(C) பாதுகாப்பு விதிமுறைகளைப் புறக்கணித்தல்

(D) பாதுகாப்பை விட வேகத்திற்கு முன்னுரிமை அளித்தல்

(E) விடை தெரியவில்லை

188. லாப நஷ்டக் கணக்கில் கீழ்கண்ட எந்தத் தகவல் இல்லை?

(A) மொத்த லாபம்

(B) நிதி பரிவர்த்தனைகள்

(C) வட்டி விவரங்கள்

(D) நிலுவையில் உள்ள செலவுகள்

(E) விடை தெரியவில்லை

189. கட்டுமானத் திட்டங்களுக்கான வங்கி கணக்கு பராமரிப்பில், எதன் மூலம் பரிவர்த்தனைகள் பதிவு செய்யப்படுகின்றன?

(A) போர்டல்

(B) வங்கி கணக்கு

(C) கணக்கு புத்தகங்கள்

(D) கணக்கு மேலாண்மை மென்பொருள்

(E) விடை தெரியவில்லை

190. கீழ்கண்டவற்றுள் எவை பொருள் மேலாண்மையின் முக்கிய நோக்கங்கள் குறித்து சரியானவை?

(1) பொருள் செலவைக் குறைக்க

(2) தேவைப்படும் போது விரும்பிய தரமான பொருட்களை வாங்கி வழங்குதல்

(3) பொருட்களின் போக்குவரத்து செலவைக் குறைத்தல்

(A) (2) மட்டும்

(B) (3) மட்டும்

(C) (2) மற்றும் (3) மட்டும்

(D) (1) மற்றும் (2) மற்றும் (3) மட்டும்

(E) விடை தெரியவில்லை

191. பின்வருவனவற்றில் எது செயல்பாடுகளிலிருந்து வரும் பணப்புழக்கத்தின் ஒரு அங்கமாக இல்லை?

(A) வர்த்தகத்திற்கு வெளியே செலுத்த வேண்டியவற்றைத் தீர்த்தல்

(B) கடனாளிகளிடமிருந்து வசூல் செய்தல்

(C) (A) மற்றும் (B) இரண்டும்

(D) இயந்திரங்களை வழங்குபவருக்கு பணம் செலுத்துதல்

(E) விடை தெரியவில்லை

192. கட்டுமானப் பொறியியல் பணிகளை மேற்கொள்ளும்போது மஸ்டர்ரோல் பின்வரும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது ?

(A) நிரந்தர ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குதல்

(B) தளத்தில் உள்ள பொருட்களுக்கான கட்டணம்

(C) தினசரி தொழிலாளர்களின் வருகை மற்றும் பணியின் அளவை பதிவு செய்தல்

(D) நிரந்தர ஊழியர்களின் வருகையை பதிவு செய்தல்

(E) விடை தெரியவில்லை

193. மாதிரியின் சோதனை முடிவுகளின் நம்பகத்தன்மையை இதன் அடிப்படையில் மதிப்பிடலாம் ?

(A) நம்பகத்தன்மை எண்

(B) நிகழ்தகவு எண்

(C) சரக்கு எண்

(D) பொறுப்பு எண்

(E) விடை தெரியவில்லை

194. பொதுவாக EMD டெண்டர் தொகையில் எத்தனை சதவீதம் ஆகும் ?

(A) 01 முதல் 02.50 சதவீதம்

(B) 10 முதல் 15 சதவீதம்

(C) 25 முதல் 30 சதவீதம்

(D) 05 முதல் 08 சதவீதம்

(E) விடை தெரியவில்லை

195. கட்டுமான அட்டவணையின் முதன்மை நோக்கம் என்ன?

(A) பயன்படுத்தப்படும் பொருட்களின் வகைகளை வரையறுத்தல்

(B) பணிகளின் வரிசையை நிறுவுறுதல்

(C) திட்ட பட்ஜெட்டை தீர்மானித்தல்

(D) கட்டுமான குழுவை தேர்ந்தெடுத்தல்

(E) விடை தெரியவில்லை

196. எந்த வகையான ஒப்பந்த ஏலதாரர்கள் தனிப்பட்ட பொருள்களின் விலையை மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறார்கள்?

(A) BOT ஒப்பந்தம்

(B) பொருள் விலை ஒப்பந்தம்

(C) பொருள் விநியோக ஒப்பந்தம்

(D) துண்டு வேலை ஒப்பந்தம்

(E) விடை தெரியவில்லை

197. குறைந்த எண்ணிக்கையிலான ஒப்பந்ததாரர்களுக்கு மட்டுமே டெண்டர் நிரப்பக் கிடைக்கும் போது அத்தகைய டெண்டர் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) பொது டெண்டர்

(B) தேர்ந்தெடுக்கப்பட்ட டெண்டர்

(C) உள்ளூர் போட்டி ஏலம்

(D) சர்வதேச போட்டி ஏலம்

(E) விடை தெரியவில்லை

198. கீழ்கண்ட எந்த வகையான ஒப்பந்தத்தில் வளையம் உருவாகும் சாத்தியத்தைத் தவிர்க்கலாம்?

(A) சதவீத விகித ஒப்பந்தம்

(B) பொருள் விநியோக ஒப்பந்தம்

(C) பொருள் விகித ஒப்பந்தம்

(D) தொழிலாளர் ஒப்பந்தம்

(E) விடை தெரியவில்லை

199. கீழ்கண்ட எந்த ஒப்பந்த நிபந்தனைகள் வேலை பராமரிப்புக்கான ஒப்பந்ததாரர்களின் பொறுப்புகளைக் குறிப்பிடுகின்றன?

(A) தாமதத்திற்கான இழப்பீடு

(B) குறைபாடு பொறுப்பு காலம்

(C) வேலை மேற்பார்வை

(D) இறுதியாக பணம் செலுத்துதல்

(E) விடை தெரியவில்லை

200. ஆரம்ப செலவுகளை ஈடுகட்ட, வேலை செய்யப்படுவதற்கு அல்லது பொருட்கள் வழங்கப்படுவதற்கு முன்னதாக ஒப்பந்ததாரர் செலுத்தும் பணம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) தக்க வைப்பு பணம்

(B) ஈவுத்தொகை பணம்

(C) பாதுகாப்பு வைப்புத் தொகை

(D) முன்பணம் செலுத்துதல்

(E) விடை தெரியவில்லை